**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. II, PONNERI**

**Case No : CC No.5/2021**
**Prosecution Witness : PW 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | | : |
| Father / Husband Name | : காசி | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( A1 to A3 absent. Counsel filed petition U/s.317 Of Cr.P.C. Petition heard and allowed. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **20/03/2024**

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது எண்.1/44, பெருமாள் கோவில் தெரு, தீயம்பாக்கம் என்ற முகவரியில் குடியிருந்து, கண்ணம்பாளையத்தில் உள்ள எஸ்.ஆர். பெட்ரோல் பங்க்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 12.09.2018 அன்று இரவு 1.30 மணியளவில் 3 நபர்கள் இருசக்கர வாகனமான ஆக்டிவா வாகனத்தில் வந்தார்கள். என்னிடம் பெட்ரோல் கேட்டார்கள். நான் அவர்களிடம் பங்க் இரவு 10 மணிக்கு மூடப்பட்டதாக கூறினேன். அவர்களுடைய தாயார் ஸ்டான்லி மருத்துவமனையில் இருப்பதாகவும், அதனால் பெட்ரோல் போடுமாறு கூறினார். அவர்கள் கூறியதின் பேரில் நான் ரூ.50/- க்கு பெட்ரோல் போட்டேன். பின்பு அவர்களிடம் கேமராவில் ஓனர் பார்ப்பார் என்றும், சீக்கிரமாக கிளம்புமாறு நான் கூறினேன். அதற்கு அவர்கள் நான் எப்போது வந்தாலும் பெட்ரோல் போட்டுதான் ஆக வேண்டும் என்று கூறினார்கள்.

பின்னர் நான் என் ரூமிற்கு சென்றபோது, பின்னால் வந்து என்னுடைய வலது கண்ணில் குத்தி விட்டார்கள். அவர்கள் 3 பேரும் என்னை கீழே தள்ளி எட்டி உதைத்தார்கள். என்னை குத்தி விடுவதாக மிரட்டினார்கள். பின்பு நான் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் அளித்தேன். பின்பு சென்ற 3 பேரும், மேலும் 3 நபர்களுடன் 6 பேராக வந்தார்கள். போலீசார் அவர்களை பிடிக்க வந்ததும், ஓடிவிட்டார்கள். என்னை அவர்கள் குத்தியதால், என் மூக்கில் இரத்தம் வந்தது. போலீசார் என்னை மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். என் முதலாளி என்னை அருகில் உள்ள பவித்ரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். வழக்கு சம்மந்தமாக புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. அந்த 3 நபர்களையும் பார்த்தால் என்னால் அடையாளம்

காட்ட முடியாது. வழக்கு சம்மந்தமாக போலீசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது, என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில் )**

என்னை பின்னால் வந்து தாக்கிய 3 நபர்களும் யார் என்று எனக்கு தெரியாது. புகார் என்னிடம் போலீசார்தான் வாங்கினார்கள். அதில் என்ன விவரம் உள்ளது என்றால், அதை அவர்கள் எனக்கு படித்து காட்டவில்லை. அந்த நேரம் என்னை தவிர பெட்ரோல் பங்கில் வேறு யாரும் இருந்தார்களா என்றால், ஒரு வாட்ச்மேன் மட்டும் இருந்தார். அவர் பெயர் பாபு. நான் போலீஸ் விசாரணையில் வாட்ச்மேன் இருந்ததாக கூறினேன். நான் போலீசாருக்கு தகவல் தெரிவித்தவுடன் 6 நபர்கள் பெட்ரோல் பங்கிற்கு வந்தவர்கள் போலீசார் இருப்பதை கண்டு சென்றுவிட்டார்கள். பெட்ரோல் பங்கிற்கு அருகில் கடை எதுவும் இல்லை.

பெட்ரோல் பங்கிற்கு பின்னால் ஒரு வளைவிற்கு பின்னால் கடைகள் உள்ளது. எனக்கும் எனது ஊர்க்காரர்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றாலும், போலீசார் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத நபர்களை எனக்கு தெரியாத நபர்களை வழக்கில் எதிரியாக சேர்த்து அவர்களுக்கு எதிராக என்னை வைத்து இந்த வழக்கில் புகார் எழுதியுள்ளார்கள் என்றாலும், என்னை சாட்சியாக தயாரித்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.